DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 13/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சாரதா** | Caste | : | |
| Father Name | : | **மணி** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **09.02.2026**

**PW - 14**

**(1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுக்கா, பெருவளநல்லூரில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 16.06.2020 அன்று பெருவளநல்லூரில் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது காலை 09.30 மணியளவில் ஆஜர் 2 ஆம் எதிரி கவியரசன் என்பவர் அலுவலகம் வந்தார், அவரது மாமா தமிழ்செல்வன் குடும்பத்திற்கும், பெரியசாமி என்பவரின் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்தது என்றும், தானும், தமிழ்செல்வனும் சேர்ந்து பெரியசாமியை வாய்க்காலில் வாயை கட்டி கத்தியால் குத்தி கொலை செய்ததாக சொன்னார். எனவே அவர் போலிசிடம் போனால் அடிப்பார்கள் என்றும், அதனால் என் முன்னிலையில் ஆஜரானதாகவும் சொன்னார். அவர் சொன்னதை வாக்குமூலமாக பதிவு செய்தேன். அவரிடம் கையொப்பம் பெறவில்லை. நான் அதில் கையொப்பம் செய்து சீல் வைத்தேன். என்னிடம் காட்டப்படுவதுதான் அந்த வாக்குமூலமாகும். அது **அதசாஆ.5** ஆகும். (எதிரிகள்

தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). அதன்பிறகு ஆஜர் 2 ஆம் எதிரி கவியரசனை அவர் கொடுத்த வாக்குமூலத்துடன் இலால்குடி காவல்நிலையத்தில் ஆஜர் செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

மேற்படி பெருவளநல்லூர் கிராமத்தில் 2019 காலகட்டத்தில் பணியில் சேர்ந்தேன். இடையில் மகப்பேறு விடுப்பில் சென்றுவிட்டேன். இந்த சம்பவ காலகட்டத்தில் நான் மட்டும் தான் மேற்படி கிராமத்தில் பணியிலிருந்தேன். அப்போது கிராம உதவியாளர் பணியிடம் காலியாக இருந்தது. 19.01.2020 அன்று பெரியசாமியின் உடல் புள்ளம்பாடி புது வாய்க்கால் அருகே எடுக்கப்பட்டது பற்றியும், அவர் இறந்தது பற்றியும் அன்றைய தினமே எனக்கு நேரடியாக தெரியாது. அவரது உடல் கண்டெடுக்கப்பட்ட பகுதி எனது கிராம எல்லைக்குள் வரவில்லை என்றால் சரிதான். நான் முதலில் திண்ணியம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தேன். நான் இதற்கு முன்பு குற்ற வழக்குகளில் எதிரிகளிடம் வாக்குமூலம் எதுவும் வாங்கியதில்லை. இதுதான் முதல் வழக்காகும். நான் சொன்ன தேதியில் கொரோனா காலகட்டம் என்றும், அன்று கட்டுப்பாட்டு ஊரடங்கு அமலில் இருந்தது, கொரோனா காலகட்டத்திலும் நாங்கள் பணிக்கு வந்துகொண்டுதான் இருந்தோம். அந்த காலகட்டத்தில் அத்தியாவசிய பணி மட்டும்தான் நான் பார்த்தேன் என்றால் சரிதான். 2 ஆம் எதிரியிடம் வாக்குமூலம் வாங்குவதற்கு முன்பாக எனது மேல் அதிகாரியிடம் ஆலோசனை எதுவும் வாங்கவில்லை, அவரிடம் வாக்குமூலம் வாங்கி காவல் துறையில் ஒப்படைத்தபிறகுதான் மேலதிகாரியான வட்டாட்சியர் சண்முகசுந்தரி என்பவருக்கு தகவல் தெரிவித்தேன். அந்த வட்டாட்சியரை காவல்துறையினர் விசாரித்தார்களா, இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் அலுவலகம் எங்கள் ஊரின் மத்தியில்தான் உள்ளது என்றால் சரிதான். அங்கு ஜனநடமாட்டம் உள்ளது என்றால் சரிதான். வழக்கமாக எனது அலுவலகத்திற்கு பொதுமக்கள் வருவார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் பொதுமக்கள்

யாருமில்லை. வாக்குமூலத்தில் யார் முன்னிலையில் வாங்கப்பட்டது என்றும், அதில் சாட்சி கையொப்பம் எதுவும் வாங்கப்படவில்லை என்றால் அன்று நான் மட்டும்தான் இருந்தேன். வேறு யாரும் இல்லை. அன்றைய தினம் பொதுமக்கள் என் அலுவலகத்தில் இருந்தார்கள் என்றும், காவல்துறையினர் கேட்டுக் கொண்டதால் அவர்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் வாக்குமூலம் கொடுத்த நபரை அதற்கு முன்பு எனக்கு தெரியாது. அவர் இன்னார்தான் என்று உறுதி செய்ய ஆவணம் வாங்கிப் பார்த்தேனா என்றால் இல்லை. 2 ஆம் எதிரிக்கு எழுத, படிக்க தெரியுமா என்று கேட்டேன், அவர் தெரியும் என்று சொன்னார். 2 ஆம் எதிரிக்கு கையொப்பம் போடவும் தெரியும் என்று சொன்னார். 2 ஆம் எதிரியிடம் வாக்குமூலத்தில் கையொப்பம் வாங்காததற்கு குறிப்பிட்ட காரணம் எதுவுமில்லை. ஒருவர் அளிக்கும் வாக்குமூலத்தில் அவரது கையொப்பம் வாங்கவேண்டியது அவசியம் என்று தெரியும். வாக்குமூலத்தின் இறுதியில் படித்து காட்டினேன், அவர் சரியென்று ஒப்புக்கொண்டார் என்று நான் எழுதவில்லை. 2 ஆம் எதிரி என்னிடம் வாக்குமூலம் அளித்ததை வீடியோவாக பதிவு செய்யவில்லை. செல்போனிலும் பதிவு செய்யவில்லை. எனது அலுவலகத்திலிருந்து இலால்குடி காவல்நிலையம் 6 அல்லது 7 கிலோமீட்டர் தூரம் இருக்கும். 2 ஆம் எதிரி எவ்வாறு காவல்நிலையம் வந்தார் என்றால் அவருடன் கூட வந்தவருடன் அவரது இருசக்கர வாகனத்தில் 2 ஆம் எதிரி காவல்நிலையம் வந்தார். நான் எனது ஸ்கூட்டியில் காவல் நிலையம் சென்றேன். 2 ஆம் எதிரியுடன் அன்று கூட வந்தவர் யார் என்று பெயர் குறிப்பிடவில்லை. கூட வந்தவர் அலுவலகத்திற்கு வெளியே நின்றார், அவரை கூப்பிட்டு வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை. கூட வந்த நபரை காவல்துறையினர் விசாரித்தார்களா என்று தெரியாது. நான் காவல்நிலையம் செல்ல மேலதிகாரியிடம் அனுமதி வாங்கவில்லை. எனது அலுவலகத்தில் மூமெண்ட் ரிஜிஸ்டர் உள்ளது. அதில் இந்த விபரம் குறிப்பிடவில்லை. எனக்கு தினசரி

நாட்குறிப்பேடு இல்லை. மனு கொடுக்க வந்தால் மனு தொடர்பான பதிவேட்டில் பதிவு செய்வேன். மனு ரிஜிஸ்டரைப் பார்த்தால் பொதுமக்கள் அன்று வந்தார்களா இல்லையா என்று தெரியும் என்றால் தெரியும். வாக்குமூலத்துடன் தனி அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை. 2 ஆம் எதிரி தனது தரப்பில் சாட்சியோ, சான்றாவணமோ இருப்பதாக கூறவில்லை. வாக்குமூலத்தில் 2 ஆம் எதிரி தன்னை ஏற்கனவே போலிசார் விசாரித்ததாக கூறியுள்ளார். அவ்வாறு இருக்கும்போது அவர் போலிஸ் விசாரணைக்கு பயந்து என்னிடம் வந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில், நேரத்தில் 2 ஆம் எதிரி எனது அலுவலகத்திற்கு வரவில்லை என்றும், என்னிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காவல்துறையினர் அழைத்ததன்பேரில் நானாக சென்று அதசாஆ.5 வாக்குமூலத்தை காவல்துறையினர் சொல்ல சொல்ல எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்துதான் 2 ஆம் எதிரியை பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் அரசு அலுவலர் என்பதால் போலிசார் சொல்லிக் கொடுத்தற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.